# அடையாளத் திருட்டு



கதை மற்றும் வடிவமைப்பு: பூர்னிமா மீகம்மன

கலை நிபுணர்: மேவ் டன்

# அடையாளத் திருட்டு

## அறிமுகம்

அடையாளத் திருட்டானது இணையத்திலும், சாதாரண வாழ்விலும் இடம்பெற முடியும். அது ஒருவருடைய தகவல்களை அவர்களது சம்மதமின்றி சேகரித்து குற்றச் செயல்களுக்கு பயன்படுத்துவதைக் குறிக்கிறது. உதாரணமாக வேறொருவரது கடனட்டைகளது தகவல்களை பயன்படுத்தலும் தன்னுடையதில்லாத மற்றவர்களது பணத்தை செலவழிப்பது போன்றவையாகும்.

அடையாளத் திருட்டு பல்வேறு வழிகளில் இடம் பெறலாம், அதில் ஒரு வழி phishing. இம் முறையானது குற்றமிழைப்பவர்களால் ஒரு சட்டபூர்வமான நிறுவனமாக தங்களை முன்வைப்பதன் மூலம் நிதி தகவலின் ஒரு ஆன்லைன் கணக்குதாரரை ஏமாற்றும் நடவடிக்கை ஆகும். இது மின்னஞ்சல் அல்லது குறுஞ் செய்தியை பயன்படுத்தி செய்யப்படுவதோடு நிதி நிலை தொடர்பான தகவல்களை உள்நுழைக்கும்படி கேட்பவையாக அமையும்.


CITY BANK
WELCOME
CITY BANK
check
100,000/=
K M இளநீர்
இளநீர் நிறுவனங்கள்
K M இளநீர்
ilaneer@fruitmail.com
+94 7781 854 872
இது என்னோட
அதிஷ்டமான நாள்
சிடி வங்கி எச்சரிக்கை
ரூபாய் 100,000.00 உங்கள்
கணக்கிற்கு வைப்பில்
இடப்பட்டுள்ளது.
உங்கள் கணக்கின்
தற்போதய இருப்பு ரூபாய்
446,000.00
CITY BANK
WELCO


அன்புள்ள திரு. இளநீர்,
வாழ்த்துக்கள்!...
https://fruitmail.com/mail/inbox
அன்புள்ள திரு. இளநீர்,
வாழ்த்துக்கள்!!!
ஒரு விசுவாசமான கூகிள் குரோம் பாவனையாளராக நீங்கள் ஒரு இலவச திறன்பேசியை (ஸ்மார்ட்போனை) பெற தோராயமாக தேர்வு செய்யப்பட்டுள்ளீர்கள்.
உங்கள் பரிசைப் பெற 12.95 டொலர் தபால் கட்டணத்தை செலுத்தவும்
கட்டணத்தை இங்கு செலுத்துங்கள் : http://chromloyalty.com
நன்றி,
கூகிள் குரோம் லோயலிட்டி குழு
ஆஹா.. நான் ஒரு தொலைபேசியை வென்றிருக்கேன்
http://chromloyalty.com/Pay
CARD INFORMATION
Name on Card K.M Thambili
Card Number 4213 4785 6316 7531
CVV 231
Expiration Date 05/06/2020
SUBMIT
க்லிக்
http://chromloyalty.com/Pay
நன்றி.
உங்கள் கட்டணம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது
நாங்கள் உங்களுக்கு திறன்பேசியை அனுப்பி வைப்போம்
ஆஹா.. இனி உன்னோட காசு எல்லாம் எனக்குத்தான்
ஹா..ஹா.. ஹா..


ALERT
CITY BANK
இது எப்படி நடந்தது?
என்னது?
சிடி வங்கி எச்சரிக்கை
ரூபாய் 446,000.00 உங்கள் கணக்கு வைப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
உங்கள் கணக்கின் தற்போதய இருப்பு ரூபாய் 0.00
ஒரு சட்டபூர்வமான நிறுவனமாக நடித்து இணையதள பாவனையாளரின் நிதி தகவல்களை சேகரிக்கும் ஒரு ஏமாற்றுக்காரரின் மின்னஞ்சலை நம்பி, தனது தனிப்பட்ட தகவல்களை இணையதளத்தில் பகிர்ந்து கொண்டதால் திரு. இளநீர் தனது சேமிப்பு அனைத்தையும் இழந்தார்.
தனிப்பட்ட தகவல்களை இணையதளத்தில் வழங்கும்போது கவனமாக இருக்க வேண்டும்.
ஐயோயோயோ...
என்னோட காசு எல்லாம் போச்சே.

# கற்றுக் கொண்ட பாடங்கள்

**Phishing இற்கு எதிரான சில உபாயங்கள்**

» தனிப்பட்ட வங்கி விபரங்களை உள் நுழைக்கும்படி கேட்க்கும் சந்தேகத்துக்குரிய இணைய இணைப்புக்களை (URL) அணுகும்போது கவனமாக இருக்க வேண்டும்.

» சந்தேகத்துக்குரிய பரிமாற்றங்களை கண்டுப்பிடிப்பதற்கு வங்கி விபரங்கள் மற்றும் கடனட்டை விபரங்களை எப்போதும் அவதானித்தல்.

» பணபரிமாற்றங்களுக்கு பாதுகாப்பான வலைத்தளங்களைப் பயன்படுத்துதல். பொருட்களை கொள்வனவு செய்ய கடனட்டை விபரங்களை உள்நுழைப்பதாயின், வலைத்தள மூலையில் (browser's status bar) பூட்டினது (lock) அடையாளம் காணப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் உங்களது விபரங்களை உள்நுழைக்க வேண்டாம்.

» புகழ்பெற்ற நிறுவனங்கள் அதாவது வங்கி அல்லது பல்கலைக்கழகம் போன்றவற்றிலிருந்து தனிப்பட்ட விபரங்களைக் கோரும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்கவோ அல்லது இணைப்புக்களை அழுத்தவோ வேண்டாம். குறித்த வங்கி அல்லது பல்கலைக்கழகத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அது தொடர்பாக கேட்கவும்.

» பொது அறிவுடன் செயற்படவும்: "உங்களது கடனட்டைகளது தகவல்களை உள்நுழைவதன் மூலம் நிச்சயமாக பாரிசுக்கு (Paris) இலவச சுற்றுப்பயணம் மேற்கொள்ளுங்கள்" போன்றவை பொய்யான ஒரு மோசடியாகும்.

» பொது wi-fi இனை பாவிக்கும்போது தனிப்பட்ட தகவல்களை அனுப்ப வேண்டாம். பொது wi-fi ஆனது பாதுகாப்பு குறைந்ததும் இலகுவாக இணையத் தாக்கத்துக்குறப்படக் கூடியதுமாகும்.

» Norton Anti-Virus போன்ற கம்பனிகளிலிருந்து வருவதாக வெளிப்படுத்தும் மின்னஞ்சல் மூலமாக ஏதாவது ஒன்றினை தரவிறக்கம் (download) செய்யக் கேட்ப்பின் அது தொடர்பாக உரிய கம்பனியைக் கேட்கவும்.